**இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு தொகுப்பு மானியம் வழங்கப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ,ஆ.ப.,அவர்கள் தகவல்**

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவித்தற் பொருட்டு முன்னாள் படைவீரர் நலத்துறையின் மூலம் 2015-2016 நிதியாண்டு முதல் தொகுப்பு மானியம் வழங்கப்படவுள்ளது. மானிய விவரங்கள் பின்வருமாறு.

1. முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலராக சேர்ந்து பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.1,00,000/- வழங்கப்படும்.
2. குறுகிய கால படைத்துறை அலுவலராக சேர்ந்து பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.50,000/- வழங்கப்படும்.
3. இளநிலை படை அலுவலர்கள் மற்றும் இதர பணிகளின் பயிற்சிக்காக, பயிற்சி பெறும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு ரூ.25,000/- வழங்கப்படும்.

''முன்னாள் படைவீரர்'' விளக்கங்களின்படி தகுதியுடைய, தமிழ்நாட்டில் வசிக்கும் முன்னாள் படைவீரர்கள் இந்நிதியுதவியினைப் பெற மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டிடத்தில் (நீதி மன்றம் அருகில்) இயங்கிவரும் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தினை நேரில் அணுகி விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன், இ.ஆ.ப., **அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.**

**வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலா திருவாரூர்**